FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8108569

1. District : Chennai PS: VSAC, CC-IV, Unit Year: 2025 FIR No.: 02/AC/CC-IV/2025 Date: 22.05.202
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் 21.05.2025 afternoon நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 22.05.2025 Time : 12.30 Hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Written
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: O/o the Revenue Inspector, Maduravoyal, Porur, Chennai-116
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 8 km
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. JENIFER (b) Father's/ Husband's Name : M. SEKAR
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 24.06.1988 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : (g) Address : 54, Visaka Apartment, Plot No. 54, Theresa Street, Nesammal Nagar Annai Annex, Nerkunram, Chennai - 107
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
M. Siva, Revenue Inspector, O/o the Revenue Inspector, Maduravoyal, Porur, Chennai - 116.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
Does not arise.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Given in separate sheet enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 22.05.2025
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 13.15hrs

Name: பெயர் C. JANSI RANI
Rank: நிலை INSPECTOR OF POLICE

.....Continuation of Column No.12 of FIR in Cr.No.2/AC/2025/CC-IV, dated 22.05.2025.

Honoured Sir,

On 22.05.2025 at about 12.30 hrs one Tmt.S.Jeniffer D/o.Sekar, S4, Visaka Apartment, Plot No.54, Annai Therasa Street, Nesammal Nagar Annex, Nerkundram, Chennai – 107 appeared before me and gave a written complaint, which runs as follows.

அனுப்புநர்:

S.ஜெனிபர்,
த/பெ. சேகர்,
S4, விசாகா அப்பார்மெண்ட்,
பிளாட் எண்.54,.
அன்னை தேரஸா தெரு,
நேசம்மாள் நகர் இணைப்பு, நெற்குன்றம்,
சென்னை - 107.

பெறுநர்:

காவல் ஆய்வாளர் அவர்கள்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
ஆலந்தூர், சென்னை.

நான் நெற்குன்றத்தில் வசித்து வருகிறேன். மேலும் M/s. Happy Heartss (Play School & Day Care) என்ற பெயரில் No.72, Vel Nagar, 3rd Main Road, Maduravoyal, Chennai – 95 என்ற விலாசத்தில் ஒரு பள்ளியை நடத்துவதற்காக அரசு விதிகளுக்குட்பட்டு அனைத்து சான்றிதழ்களும் பெற்று வருவாய் கோட்டாட்சியர், மத்திய சென்னை கோட்டம் சென்னை - 101 அலுவலகத்தில் 15.11.2024 அன்று Form D License காக விண்ணப்பம் செய்தேன். அந்த

விண்ணப்பத்தோடு மதுரவாயல் தீயணைப்பு / மீட்புப்பணி நிலையம் கொடுத்த த.சா.எண்.12/2024, ந.க.எண்.215/V/MVL/2024. நாள்.31.07.2024 தடையின்மைச்சான்று, மண்டல சுகாதார அதிகாரி, மண்டலம் - 11 கொடுத்த Z.O.XI/Z.H.O.XI/C.NO/1124/2024, dated.14.09.2024 Sanitary Certificate, பொறியாளர் கொடுத்த Structural Stability Certificate மற்றும் இடத்தின் உரிமையாளரிடம் போட்ட வாடகை ஒப்பந்த பத்திரம் ஆகியவற்றை இணைத்து கொடுத்தேன். நான் கொடுத்த விண்ணப்பத்தை விசாரணை செய்து விரிவான அறிக்கை கொடுக்கும் படி வட்டாட்சியர், மதுரவாயல் வட்டம் அலுவலகத்திற்கு ந.க.எண்.7574/2024/அ6, நாள்.25.11.2024 ன் படி அனுப்பி வைத்தனர்.

நீண்ட நாட்கள் எவ்வித நடவடிக்கையும் இல்லாத காரணத்தினால் நான் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று விசாரணை செய்தேன். அப்போது அவர்கள் என்னுடைய மனு வருவாய் ஆய்வாளர், போரூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். நான் என்னுடைய தொலைபேசி எண்ணிலிருந்து 7200190396 20.03.2025 அன்று வருவாய் ஆய்வாளரை தொடர்பு கொண்டு என்னுடைய மனு தொடர்பாக விசாரித்தேன். மேலும் அன்று நானும் என்னுடைய நண்பர் திரு.அய்யனார் அவர்களும் நேரடியாக சென்று பார்த்து விண்ணப்பத்துடன் கொடுத்த ஆவணங்களின் நகல்களை அவர் கேட்டதன்பேரில் கொடுத்தோம்.

அவர் எங்கள் பள்ளிக்கு வந்து ஆய்வு செய்வதாக தெரிவித்தார். அதன்பிறகு 06.05.2025 அன்று வருவாய் ஆய்வாளர் என்னுடைய பள்ளிக்கு வந்து ஆய்வு செய்தார். நான் அவரிடம் விசாரித்தபோது அவர் தன்னுடைய அறிக்கையை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பதாக தெரிவித்தார்.

என்னால் அலைய முடியாத காரணத்தினால் என் சார்பாக என்னுடைய நண்பர் திரு.அய்யனார் சான்றிதழ் தொடர்பாக வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று பார்த்தார். அப்போது அவர்கள் வருவாய் ஆய்வாளர் அவர்கள் அலுவலகத்தில் இருந்து விசாரணை அறிக்கை வரவில்லை என்று தெரிவித்தார்கள்.

அதன்பிறகு அவர் பல தடவை வருவாய் ஆய்வாளர் திரு.சிவாவை அவரது அலுவலகத்திற்கு சென்று பார்த்தார். மேலும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு என்னுடைய விண்ணப்பம் தொடர்பாக விசாரித்தார்.

கடைசியாக 20.05.2025 அன்று மதியம் திரு.அய்யனார் திரு.சிவாவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசி நேரடியாக சென்று பார்த்தார். அப்போது அவர் வேறு வேலையாக இருப்பதாகவும் மறுநாள் 21.05.2025 அன்று மதியம் வந்து சந்திக்கும்படி கூறினார்.

அதன்பேரில் 21.05.2025 அன்று மதியம் திரு.அய்யனார் திரு.சிவாவை அவரது அலுவலகத்திற்கு சென்று சந்தித்தார். அப்போது அவர் என்னுடைய விண்ணப்பத்தின் பேரில் விரிவான அறிக்கையை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க ரூ.15,000/- தனக்கு லஞ்சமாக கொடுக்கவேண்டும் என்றும் அப்போது தான் தன்னுடைய அறிக்கையை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்புவேன் என்று தெரிவித்தார்.

அப்போது திரு.அய்யனார் அவரிடம் எங்களிடம் அவ்வளவு பணம் இல்லை என்று தெரிவித்தார். அதற்கு அவர் தன்னுடைய அறிக்கையை அனுப்பவேண்டும் என்றால் கண்டிப்பாக ரூ.10,000/- 22.05.2025 அன்று கொடுக்கவேண்டும் என்று தெரிவித்ததாக திரு.அய்யனார் என்னிடம் கூறினார்.

அவருக்கு லஞ்சமாக பணம் ரூ.10,000/- கொடுத்து Form D License வாங்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே Form D License தொடர்பாக விரிவான அறிக்கை அனுப்ப வருவாய் ஆய்வாளர் திரு.சிவா லஞ்சமாக கேட்ட பணம் ரூ.10,000/-த்துடன் இந்த புகார் மனு மற்றும் கோட்டாட்சியர் அலுவலகத்தில் கொடுத்த ஆவணங்களின் நகல்களையும் தங்களிடம் கொடுக்கிறேன். என்னிடம் லஞ்சமாக பணம் கேட்ட திரு.சிவா வருவாய் ஆய்வாளர் என்பவர் மீது சட்டபடியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். Honoured Sir, Received the above complaint on 22.05.2025 at 12.30 hrs, A discreet

enquiry was caused against Tr.Siva, Revenue Inspector, O/o. the Revenue Inspector, Maduravoyal, Porur, Chennai and confirmed above the corrupt activities and also verified the bonafide of the complainant. After getting orders from Superior Officer, registered a case in Cr.No.2/AC/2025/CC-IV U/s 7 of Prevention of Corruption (Amendment) Act 2018, dated 22.05.2025 at 13.00 hrs and took up the investigation. The original FIR along with the complaint and the documents given by the complainant are submitted to the concerned Hon'ble Court.

(C.Jansi Rani)
Inspector of Police,
Chennai City –IV,
Vigilance and Anti Corruption,
Chennai-16.